[1981 ஏப்ரல் 24

ஒன்றியத்துக்கு ஒரு கை பம்பு பொருத்துநரை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் 864—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இரு ஒன்றியங்களுக்கு சேர்த்து கை பம்பு பழுது பார்க்க ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஒரு ஒன்றியத்திற்கு ஒருவரை நியமனம் செய்யும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தெரியும்.

(ஆ) ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பொருத்துநரை நியமனம் செய்யுமாறு அரசு, வாரியத்திற்கு அரசு ஆணை எண் 380, ஊ. வ. உ. துறை, 11—3—1981 நாளிட்ட ஆணையில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு எலக்ட்டிரீஷியன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கைப் பம்புகள், மற்றும் மேல்நிலை நீர்த் தொட்டிகள் சரிவர வேலை செய்வதற்கு ஒரு எலக்ட்ரீஷியன்தான் இருக்கிறார். அது போதாது. மேலும் இரண்டு பிட்டர்களும், ஒரு எலக்ட்ரீஷியனும் கொடுத்தால், அந்தக் கிராமத்திலுள்ள கைப் பம்புகளை சரிவர பராமரிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா எண் 861-க்குப் பதில் சொல்லும்போது-இந்த நான்கு கேள்விகளும் குடி தண்ணீரைப்பற்றியது- விளக்கமாக இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் விடுமுறை காலத்தில் அங்கு சென்று வந்து சொன்னால், மேலும் இவைகளைச் செய்ய வேண்டுமென்று ஏதாவது தகவல் கொடுத்தால், அரசு உடனடியாக மிக வேகமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுமுறைக் காலங்களில் உறுப்பினர்கள் தொகுதிக்குச் சென்று பார்க்கவேண்டும் என்று சொல்கிறார். ஆனால், நாங்கள் அதற்கு முன்பாகவே தொகுதிக்குச்

சென்று பார்த்திருக்கிறோம். பல இடங்களில் போர் செய்யப்பட்டு, ஹாண்ட் பம்புகள் போடப்படாமல் அதனால் தண்ணீர் இல்லாமல், மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள், கால்நடைகள் சில இறந்திருக்கின்றன, சில கால்நடைகள் வெளியே சென்றிருக்கின்றன. இந்த நிலைமைகள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் தன்னைத்தானே பாராட்டிக் கொள்ளுகின்ற அளவிற்கு நிலைமைகள் அங்கே இருப்பதாகச் சொல்லுகிறார். இது மிகவும் அவசரமான பிரச்சினை, குடிதண்ணீர்ப் பிரச்னை தொகுதியிலே நிலைமையை அறிய அமைச்சர் அவர்கள் வந்தால், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஹாண்ட் பம்புகள் சரிவர வேலை செய்யவில்லை. அவைகளை சரிசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரண வேலைத் திட்டத்தின்கீழ் குடிநீர் வடிகால் வாரியம்—இன்னும் சொல்லிக் கொள்வேன்—மிகத்திறமையாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் இப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். பொதுவாகச் சொல்லக்கூடாது. கேள்வி நேரம் முடிந்து 10½ மணிக்குப் பிறகு நாம் 'ப்ரீ'யாக இருப்போம். (குறுக்கீடு) நான் நின்று கொண்டிருக்கிறேன். இப்படி ஒருவருக்கொருவர் குற்றச் சாட்டுச் சொல்வது சரியல்ல. மக்களுக்கு தண்ணீர் பிரச்னையிலே பரிகாரம் தேடுவதற்காக வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் அதன் பெயரைச் சொல்லி, இப்படி இருக்கிறது என்று 10½ மணிக்குச் சொன்னால், நான் உடனடியாக எஸ்.ஈ.ஐக் கூப்பிட்டு, 12 மணிக்குள் அதைப்பற்றி கவனிக்க முடியுமா? அதைச் செய்ய முடியுமா, என்பது பற்றி பரிசீலனை செய்யச் சொல்கிறேன். இந்தப் பிரச்னையில் நாம் 'ப்ரேக்னெக்ஸ்பீடில்' போய்க் கொண்டிருக்கிறோம் என்று மீண்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தர்மபுரி மாவட்டம் வெள்ளோளைப் பகுதியில்
பாசனத்திற்கு வாய்க்கால் வெட்டும் பணி.

*வினா எண் 865—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளோளை என்ற இடத்தில் ஏரி கட்டப்